# கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்கள்



## வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

வெளியீடு

கல்வி, கலாசார அலுவல்கள், தகவல் அமைச்சு

801

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

370.022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க

பாகுபாடற்ற முறையில் யாவருக்கும் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தும் பான்மை கொண்ட இலவசக் கல்வி முறையினை அறிமுகப்படுத்தியவரான மறைந்த கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களை நினைவுகூருதல் நன்றி மறவாத மக்கள் அனைவரினதும் கடமையாகும். அப்பெரியார் அறிமுகம் செய்து வைத்த இலவசக் கல்வித் திட்டமானது இந்நாட்டில் படிக்கும் திறமையுள்ள வறிய பிள்ளைகள் சமுதாயவாழ்வில் சிறந்து விளங்கத் துணைபுரிந்தது. இலவசக் கல்வியால் பயனடையும்பேறு பெற்ற நாம் அனைவரும் அக்கல்வி முறையினை போற்றிக் காத்தல் வேண்டும். நீள் நோக்குடைய தேசியச் செம்மலான கன்னங்கராப் பெரியார் ஆய்ந்தெடுத்த அந் நடவடிக்கை காரணமாக நம் நாட்டு மக்கள் இன்று வீரம் மிகுந்தவர்களாகத் திகழுகிறார்கள்.

கன்னங்கராப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் தோறும் படிக்கும் தோறும் அண்மைக்காலத்தில் அவரைப் போன்று தளராத முயற்சிக்கும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற அறிவுக்கும் எடுத்துக் காட்டாக வாழ்ந்த வேறு எவரும் இல்லையெனத் தெரிகிறது. மிகுந்த மனத் தெளிவோடு தாமே தெரிவு செய்த பாதையொன்றில் வருங்காலத் தலைமுறையினர் நடைபோடுவதற்கென அயராதுழைத்த கன்னங்கராப் பெரியார் யுகப் புருடராய் விளங்குகின்றார்கள்.

கன்னங்கராப் பெரியாரின் பிறந்த நாளாகிய ஒக்டோபர் 13 ஆம் திகதியன்று எல்லாப் பாடசாலைகளிலும் அன்னாரை நினைவுகூரும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நாடெங்கிலுமுள்ள மாணாக்கர்கள் அனைவருக்கும் அன்னாரைப் பற்றிச் சொல்லிக் கொடுப்போம். அதன் பொருட்டான நிகழ்ச்சித் திட்டமொன்று ஒக்டோபர் 12 ஆந் திகதியன்று அகில இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலவசக் கல்வியின் சிறப்பினை எண்ணி மகிழ்வதும் அதனைப் பேணுவதற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வதும் இன்று மிக மிக அவசியமாகிறது. இவ் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை பாடசாலை மாணவர்கள் விரும்பி படிக்கச் செய்து பண்பும் சீரும் நிரம்பப் பெற்ற சமுதாயமொன்றை உருவாக்க உதவுமாறு உங்கள் அனைவரையும் வேண்டுகின்றேன்.

மும்மணிகளின் ஆசிகள்.

இங்ஙனம்

அன்புள்ள

**வி. ஐ. மு. லொக்குபண்டார**

கல்வி, பண்பாட்டு அலுவல்கள், தகவல் அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மூலம்:
முதுமாணி பண்டிதர்
குணபால சேனதீர

தமிழாக்கம்:
விசுவநாத் வச்சிரசேன

வெளியீடு:

**கல்வி, பண்பாட்டு அலுவல்கள், தகவல் அமைச்சு**

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வியின் தந்தை

அன்று நம் தாய்நாடானது சூரியன் மறையாப் பேரரசெனப் போற்றப் பட்ட பிரித்தானியச் சாம்ராச்சியத்தின் அடிமை நாடாக விருந்த விருள் சூழ்ந்த காலமாகும். ஆங்கில மொழி ஆதிக்கம் காரணமாகவும் சமயப்பரப் பாளர்களின் சமத்துவம் பேணுத கல்வி முறை காரணமாகவும் தீவிர வகுப்புவாதம் சமூகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. உயர் கல்வி கற்றும் வசதிகள் சிறப்புரிமைகள் கொண்ட உயர்வகுப்பாளர்கள் சிலருக்கு மட்டுமே வாய்த்திருந்த காலமே அது. தாய் மொழிகள் அடுப்பங்கரைக்குத் தள்ளப்பட்டிருந்தன. தேசீயக் கவின்கலைகளும் தேசீய நாகரிகமும் போற்று வாரின்றி புறக்கணிக்கப்பட்டிருந்தன.

## அருமைத்தாய் தந்தையர்கள்

பலப்பிட்டி நீதிமன்றத்தின் டிபியுட்டி பிசுக்கால் பதவியை வகித்த திருவாளர் யோன் தானியெல் விஜேகோன் அவர்கள் இப்பெரியாரின் தந்தை ஆவார். திருமதி எமலி விஜேசிங்கா அவர்கள் அன்னையாவார். கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கரா எனத் திருநாமம் சூட்டப் பெற்ற இக் குழந்தை இலங்கையில் அந்நியர் ஆதிக்க விருள்படர்ந்திருந்த காலகட்டமான 1884 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 13 ஆந் திகதி அம்பலாங்கொடை ரந்தொம்பே என்னும் இடத்தில் பிறந்தது.

ஆண் பிள்ளைகள் மூவரும் பெண்பிள்ளைகள் இருவரும் பிறந்த விஜே கோன் குடும்பத்தின் கிறிஸ்டோபர் மூன்றும் பிள்ளையாகும். இவருடைய தந்தையான திரு தானியல் அவர்கள் பௌத்த குடும்பமொன்றில் பிறந்த வரெனினும் கிறித்தவப் பெண்மணியொருத்தியை திரு மணம்புரிந்து கொண்டமையால் அக்கால வழக்கத்தின்படி கிறிஸ்டோபர் உள்ளிட்ட பிள்ளைகள் அனைவரையும் ஞானஸ்நானம் செய்துவித்தார்கள். அவர் அரச ஊழியராகப் பணிபுரிந்த காலத்தில் மறைவாகப் புத்தபகவானின் அறவுரை களைக்கடைப்பிடித்து வந்ததெனினும் இளைப்பாறியதன் பின்னர் புத்த சம யத்தை பக்தி சிரத்தையோடு வழிப்பட்டு வந்தார்.

## பள்ளிப் பருவம்

எழுத்தறிவிக்கும் பொருட்டுச் சிறிய கிறிஸ்டோபர் அக்காலத்தில் தெற் கில் மிகப் பழமைவாய்ந்த ஆங்கிலப் பள்ளி யெனக்கருதப்பட்ட அம்பலாங் கொடை வெஸ்லியன் ஆங்கிலப்பள்ளியில் சேர்க்கப்பெற்றுர். இலவசக் கல்விப் பணிக்காக நாடெங்கிலும் அவர் சுற்றி வந்தபோது அவர் உச்சரித்த ஸ்ரீ இராகுலன் என்னும் சிங்களக் கவிச்சக்கரவர்த்தி இயற்றிய—

''குருவின் உள்ளம் நோகாவாறும்
அருகிடு நேரம் பிழையாவாறும்
பெருகிய ஊக்கத்துடனே கல்வித்
திருவலர்ச் சிறுவன் பயில்கின்றுனே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாடலை நினைவூட்டும் வகையில் சிறிய கிறிஸ்டோபர் கல்வி பயின்று வந்தார். அவர் சிறுவனாக இருந்தகாலத்திலேயே அவரைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த அன்னை காலமாகிவிட்டதும் தமது தந்தை எதிர்ப் பாராதவிதமாக தொழில் இழந்ததும் பேரிடிகளாக அவரைத் தாக்கின.

அவருடைய பிதா மறுமணம் புரிந்து கொண்டு மேலும் பிள்ளைகள் நால்வருக்குத் தந்தையானபடியால் குடும்பத்தின் பிள்ளைகளின் எண்ணிக்கை ஒன்பது வரை அதிகரித்தது. உத்தியோகம் அற்றவராகவும் பெரிய குடும்ப பாரத்தோடும் இருந்த தந்தைக்குச் சிறிய கிறிஸ்டோபரைச் சரிவர கவனிக்க இயலாத நிலை ஏற்பட்டது. ஆனால் இவற்றுக்குச் சளைக்காமல் தனது படிப்பில் கண்ணும் கருத்துமாக இருந்த சிறிய கிறிஸ்டோபரின் மனவுறுதியானது அவருக்கு ஒளிமயமான வருங்காலம் இருக்குமென்பதற்கு அறிகுறியாய் திகழ்ந்தது. அன்று அவர் மனமுடைந்து போயினரென்றால் இலவசக் கல்வியின் மூலம் முழு நாட்டிற்கும் அருஞ் சேவையாற்றும் பெருமகனார் ஒருவரை இலங்கை நாடு இழந்திருக்கும். அம் மனவுறுதிக்குத் தகுந்தாற் போலத் திருமகள் கடாட்சத்தினால் ஓர் அரிய நற்பேறு அவருக்கு கிட்டியதாயிற்று அன்று வெஸ்லியன் கல்லூரியின் 1897 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவாகவிருந்தது. அவ் விழாவின் பிரதம அதிதியாக காலி றிச்மண்ட் கல்லூரி அதிபரும் உயர் கேம்பிறிஜ் பட்டதாரியுமான வண. பிதா ஜே. எச். டரல் அவர்கள் கலந்துகொண்டார்கள். தமது கையிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக பரிசுகள் பலவற்றைத் தட்டிக் கொண்ட கறுப்புநிற முடைய எழில்ததும்பும் மாணவன் ஒருவன் மீது அவருடைய கண் விழுந்தது. அங்ஙனம் றிச்மண்ட் கல்லூரி அதிபரின் அன்பை ஈர்த்துக் கொண்டவன் நமது கிறிஸ்டோபர் மாணவன் ஆவான். விழாவின் பின்னர் விடை பெற்றுக்கொண்ட போது அம்மாணவனைத் தமது கல்லூரியால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவிக்கும்படி வெஸ்லியன் பாடசாலை அதிபரிடம் அன்புக் கட்டளையிட்டுச் சென்றார் றிச்மண்ட் கல்லூரி அதிபர்.

## றிச்மண்ட் கல்லூரியில் படித்தல்

அவ்வன்பான கட்டளை ஏற்றுக் கொள்ளப்பட்டது. போட்டிப் பரீட்சையும் இடம் பெற்றது. மாணவன் கிறிஸ்டோபர் மற்றெல்லாமாணவர்களையும் தோற்கடித்துப் புலமைப் பரிசிலைத் தட்டிக்கொண்டான். புலமைப் பரிசில் பெற்றதன் காரணமாக இலவசமாகக் கல்வி கற்கும் வசதிகள் கிடைத்தனவாயினும் தேவைப்படும் நூல்களைக் கொள்வனவு செய்யும் பிரச்சினை அவன் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதிலும் தன்கையே தனக்கு உதவுமென்ற பழமொழிக்கேற்ப அவனுடைய திறமை தான் அவனுக்கு உதவியது. எல்லாப் பாடங்களிலும்; குறிப்பாக கணிதப்பாடத்தில்; அவன் காட்டிய விசேடத் திறமை காரணமாக அக்கல்லூரியின் பரிசளிப்பு ஆண்டு விழாக்கள் எல்லாவற்றிலுமே அவர் பரிசாகப் பெற்ற நூல்களும் பணமும் அவனுடைய கஷ்ட நிலையினைப் போக்க உதவின. விவிலிய அறிவுக்காக வழங்கப்படும் பரிசு ஆண்டுகள் தோறும் பெற்றுக்கொண்ட கிறிஸ்டோபர் கணிதத்துக்கு வழங்கப்படும் தேர்ச்சிப்பரிசினை 1900, 1901, 1903 ஆகிய ஆண்டுகளில் பெற்றுக்கொண்டார். வேறு ஏராளமான பரிசுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று அக்கல்லூரிக் குறிப்பேடுகளில் தம் பெயரைப் பொன்னெழுத்தில் பதிய வைத்தார்.

## விளையாட்டு வீரர்

அம்மட்டுமன்று. விளையாட்டு மைதானத்திலும் அவர் ஈடுபாடு கொண்டார். தமது கல்லூரி கிறிக்கட் குழுவின் தலைவராகப் பணியாற்றிய இக் கணித மேதை கால் பந்தாட்டம் உள்ளிட்ட ஏனைய விளையாட்டுக்களிலும் நிகரற்றவராய் விளங்கினார்.

கல்லூரி விவாதக் குழுவிற்கும் தலைமை தாங்கிய இவர் பலவிவாதங்களின்போது தமது கட்சியின் வெற்றிக்குத் துணைபுரிந்தார். மேலும் நடிப்புக் கலையில் அவருக்கிருந்த திறமையினை ''வெனிசு நகரத்து வாணிபன்'' என்னும் நாடகத்தை நடித்துக்காட்டி கல்லூரி மண்டபம் அதிர வைத்த நாளில் பலரும் அறிந்தனர்.

## கணித மேதை

இவ்வாறு பல தேர்ச்சிகளையும் புலமைகளையும் பெற்றிருந்த கிறிஸ்டோபர் 1901 இல் கேம்பிறிஜ் சீனியர் தேர்வில் எண் கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் இலங்கையிலும் ஏனைய பிரித்தானிய நாடுகளிலும் மிகக்கூடிய புள்ளிகளை வாங்கிக் கொண்டு முதலாம் இடத்தில் சித்தி எய்தினார். அதனால் அவ் வாண்டில் அதி திறமைவாய்ந்த மாணவனுக்கு வழங்கப்பட்ட பரிசினையும் கல்விப் பணிப்பாளிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

தமது மாட்சிமிக்க ஆசிரியரான டரல் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1904 ஏப்பிறில் 20 ஆந் திகதி றிச்மண்ட் கல்லூரி ஆசிரியர்க் குழுவில் சேர்ந்த கிறிஸ்டோபர் அக்கல்லூரியின் சிரேட்ட கணித ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். 1906 இல் தம் அருமை ஆசிரியரான டரல் அதிபர் அவர்களின் அகால மரணம் வரை இளைஞர் கிறிஸ்டோபர் றிச்மண்ட் கல்லூரியில் பணிபுரியலானார்.

றிச்மண்ட் கல்லூரியை விட்டகன்றதன் பின்னர் கிறிஸ்டோபர் சட்ட அறிஞராகத் தேறுவதற்கு எண்ணினார். அந் நோக்கத்துடனே கொழும்பு மா நகரம் அடைந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். வாழ்க்கைச் செலவினையும் படிப்புச் செலவினையும் சமாளித்துக் கொள்ளும் பிரச்சினை நமது இளம் வீரனின் மனதை உறுத்தியது. உயர் ஆசானான டரல் போன்ற புகழ்மிக்க கணிதமேதையொருவரின் சீடராக விளங்கிய கிறிஸ்டோபருக்கு அது அவ்வளவு பெரிய சிக்கலாக அமையவில்லை. மொறட்டுவவில் வேல்ஸ் இளவரசர் வித்தியாலயத்தில் சிரேட்ட கணித ஆசிரியர் பதவியில் கடமையாற்றிக் கொண்டே சட்டக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஆனால் நீண்ட காலத்துக்கு அல்ல. அக்கல்லூரி அதிபருடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டமையால் பதவி விலகல் செய்த கிறிஸ்டோபர் கன்னங்கரா அவர்கள் கொழும்பு மாநகரத்து வெஸ்லி கல்லூரியிலும் மெதோதிஸ்த கல்லூரியிலும் பகுதி நேர ஆசிரியராகத் தொண்டாற்றியதுடன் சட்டக் கல்லூரிப் படிப்பிலும் ஈடுபட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவறிஞர்த் தொழில்

சட்டக் கல்லூரிப் படிப்பினை முடித்துக் கொண்ட அவர் 1910 இல் உயர் நீதிமன்ற வழக்குரைஞராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு காலி மாநகரத்துக்குச் சென்று சட்டவறிஞராகப் பணிபுரியத் தொடங்கினார்கள். சிவில் வழக்குகளில் தோற்றும் சிறந்த வழக்கறிஞராக விளங்கிய அவரிடம் புகழும் பொருளும் ஒருசேர வந்து சேர்ந்தன. சட்டத்தொழில் புரிந்து பெரும் புகழ் ஈட்டிய இளம் கன்னங்கரா அவர்கள் பொது மக்கள் பணிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். இருள் சூழ்ந்த காலமான 1915 ஆண்டில் இடம்பெற்ற சிங்கள - முஸ்லிம் போராட்டத்தின் போது நீதியின் வலையில் அகப்பட்ட அப்பாவிச் சிங்களவர்களின் சார்பில் கட்டணமின்றித் தோற்றுபவராய் அவர்களுக்கு அபயம் வழங்கினார்கள். அத்துடன் சட்டத் தொழில் இல்லாத நாட்களில் தமது பிரதேசத்தில் சமூக நலச் சேவைகளி லும் ஈடுபட்டார். இவ்விளஞ் சட்டக்குரிசில் காலி மாவட்டத்துக்கு ஆற்றிய சேவை அளப்பரியதெனலாம்.

## காலி மாவட்டத்துப் பொதுசன சேவை

காலி நூல் நிலையச் சங்கத்திலும் அசரண சரண சங்கத்திலும் கௌரவச் செயலாளராகவும் காலி ஜிம்கான சங்கத்தின் உறுப்பினராகவும் சிங்கள இளைஞர் சங்கத்தின் உதவித் தலைவராகவும் காலி மது ஒழிப்புச் சங்கத்தின் பிரதானச் செயலாளராகவும் பணியாற்றிய திரு. கன்னங்கரா அவர் கள் மேலும் பல பதவிகளையும் சிறப்பித்து வந்தார்கள்.

பொதுசன சேவையில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு எத்தகைய தென் பதைத்தெளிவுறக்காட்டிய சம்பவங்கள் சில அக்காலத்தில் நிகழ்ந்தன. 1916 ஆம் ஆண்டில் பரவிய கொடிய தடுமல் நோயின்போது நோயாளி களுக்கு உதவிகளை வழங்கும் திட்ட ஏற்பாடுகள் எல்லாவற்றையும் அவர் செவ்விதின் மேற்பார்வை செய்தார். அதனைப் போன்று முதலாம் உலக யுத்த சமயத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தின் போது காலி மாநகர சபை எல்லைக்குள் பங்கீட்டு அரிசி வழங்கல் திட்டமொன்றைச் செயல்படுத்திய பெருமையும் அவரைச் சாரும்.

## புத்த சமயத்தைத் தழுவுதல்

தாம் வகித்து வந்த மேற்கூறிய பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கு மிடையில் அவர் மேலுமோர் முக்கிய தீர்மானத்தையும் எடுத்தார்கள். தமது வாழ்க்கைக் கண்ணோட்டத்திலும் அணுகுமுறையிலும் பெரிய மாற் றத்தைக் கொணர்ந்த அத் தீர்மானம் யாதெனில் தம் ஆருயிர் தந்தையின் மதமான புத்த சமயத்தைத் தழுவுவதற்கு அவர் எடுத்த முடிவாகும். இம்மதமாற்றம் 1917 இல் இடம் பெற்றது.

மனத்தூய்மையோடு மேற்கொண்ட இம் மதமாற்றம் பிற்காலத்தில் அவரைக் குறைகூறியவர்களால் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பட் டது. அரசியல் செல்வாக்குக் கருதி அந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட தென்று பலர் அவரை அவமானப்படுத்தினார்கள். ஆயினும் 1917 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக் காலகட்டத்தில் பொதுசன வாக்குரிமை அமுலில் இருக்கவில்லை. சட்ட நிரூபண சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் யாவரும் படித்த உயர் மட்டத்தைச் சேர்ந்த ஈராயிரம் அல்லது மூவராயிரம் வாக்காளர்த் தொகுதியொன்றினால் தான் தெரிவு செய்யப்பெற்றனர். எனவே அவருடைய மதமாற்றமானது அவருக்குப் பாதகமாகவே இருந்ததெனலாம்.

## சிங்கள, பாளி மொழி அறிவு

சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையினராக வாழும் ஒரு நாட்டிலே தாய்மொழியிலும் தமது சமயத்திலும் புலமையற்றவராக சமூகத் தொண்டில் ஈடுபடுவது குற்றமென உணர்ந்த கன்னங்கரா அவர்கள் ஓய்வான நேரங்களில் காலியில் சிறந்து விளங்கிய பிரிவெனு ஒன்றுக்குச் சென்று சிங்கள மொழி அறிவினையும் பாளி மொழி அறிவினையும் வளர்த்துக் கொண்டார். அதன் விளைவாக சிறிது காலத்தில் தாய் மொழியில் சொற்பொழிவுகளை ஆற்றுவதிலும் கட்டுரைகளை எழுதுவதிலும் சிறந்து விளங்கினர். ''ஒவா முத்துஹர'' (அறிவுரை முத்துச்சரம்) ''கவ்மிணி சயுர'' (காவிய மணிக்கடல்) ஆகியவற்றைப் போன்ற நூல்களை எழுதிய தமது தந்தையின் கவிதா சக்தி புத்திரரான கிறிஸ்டோபர் கன்னங்கராவும் கொண்டிருந்தமைக்குக் காரணம் அவர் பௌத்த பள்ளியில் படித்த கல்வியே எனலாம்.

## இலங்கை தேசியக் காங்கிரசை நிறுவுதல்

இக் காலகட்டமானது ஏகாதிபத்திய நாடுகளின் அடிமைத்தளையினின்று தம் மக்களை விடுவித்துக் கொள்வதற்கு ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் சுதந்திரப் போராட்டத்தில் இறங்கிய காலமாகும். நமது அண்டை நாடான இந்தியாவில் அண்ணல் காந்தி அடிகளின் வழிகாட்டுதலின் கீழ் மாபெரும் சுதந்திரப் போராட்டம் இயங்கிக் கொண்டிருந்தது. அச் சூழலிலே இலங்கையிலும் நாட்டுப் பற்றுள்ளவர்கள் பலர் இலங்கை தேசிய காங்கிரசின் கீழ் அரசியலமைப்புச் சீர்த்திருத்தமொன்றைக் கொணரும் பொருட்டுக் குரல் எழுப்பி வந்தனர். அச் சுதந்திரப் போராட்டத்திற்கு நமது அஞ்சா நெஞ்சம் கொண்ட இளஞ் சட்டக்குரிசில் அளப்பரிய சேவையினை ஆற்றியுள்ளார்.

''காலி தேசியக் காங்கிரசு'' எனப் பெயரில் அரசியல் அவையொன்றை 1917 இல் நிறுவுவதில் திரு கன்னங்கரா அவர்கள் முன்னேடியாகப் பணிபுரிந்தார். அக் காங்கிரசின் முதலாவது செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 1923 ஆம் ஆண்டில் சட்ட நிரூபண சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவரை அப்பதவியைச் சிறப்பித்தார். சட்ட நிரூபண சபைக்குத் தென் மாகாணத்து ஆசனத்துக்காக நம் நாட்டு தேசியச் செம்மல்களில் ஒருவரான பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைத் தெரிவு செய்து அனுப்பும் 1917 தேர்தல் இயக்கத்தில் கன்னங்கரா அவர்களும் அயராது உழைத்துள்ளார். அந்த ஆண்டில் டிசெம்பர் 15 ஆந் திகதியன்று தேசிய விடுதலைப் போராட்டத்தின் முன்வரிசையில் நின்ற நாட்டுப்பற்றுள்ளவர்கள் சிலர் கொழும்பில் நடாத்திய வரலாற்றுப்பெருமை மிக்க கூட்டத்தில் காலி மாகாணத்துத் தூதுக் குழுவின் தலைவராகவும் இளங்குரிசில் கன்னங்கரா அவர்கள் கலந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1919 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று கொழும்பில் நடாத்தப்பட்ட இலங்கை தேசீயக் காங்கிரசின் முதலாவது அமர்வின் போது திரு. கன்னங்கரா அவர்கள் ''ஏன் வேண்டும் அரசியல் சீர்திருத்தம்'' என்னும் பொருள் பற்றிச் சண்டமாருதச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினர்கள். சட்ட நிரூபண சபையினதும் சட்ட நிறைவேற்றச் சபையினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல் வேண்டுமென்றும் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் நகரமன்றங்களில் உறுப்பினராதல் வேண்டுமென்றும் சிவில் சேவை உள்ளிட்ட ஏனைய அரச சேவைகளின் உயர் பதவிகள் இலங்கையர்களுக்கு வழங்கப்படல் வேண்டு மென்றும் கமத்தொழில் உள்ளிட்ட தேசீயக் கைத்தொழில்களின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு. கன்னங்கரா அவர்கள் அச் சொற்பொழிவில் ஆணித்தரமாக எடுத்தியம்பினர்.

திரு கன்னங்கரா உள்ளிட்ட தேசாபிமானிகள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 1920 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சட்ட நிரூபண சபையில் பதவிவழியற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை முதன் முதலாக அதிகரிப்பதற்கு பிரித்தானிய அரசு ஒப்புக்கொண்டது. ஆனல் சுதந்திரப் போராட்டம் அவ்வளவோடு நிறுத்தப்படவில்லை. திரு. கன்னங்கரா உள்ளிட்ட தேசாபிமானிகள் இருபதுபேரின் கையொப்பங்களுடன் வரையப்பட்ட அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தை ஏற்படுத்தும்படி கோரும் மகஜர் ஒன்று அக்காலத்துக் குடியேற்ற நாட்டுச் செயலாளர் வின்சன்ட் சேர்ச்சில் அவர்களுக்கு 1922 யூலை மாதம் 8 ஆந் திகதி அனுப்பப்பட்டது. 1923 மே மாதம் 23 ஆந் திகதி அனுப்பப்பட்ட அதே பான்மை கொண்ட இன்னெரு மகஜரிலும் திரு. கன்னங்கரா கையொப்பம் இட்டுள்ளார். அதன் விளைவாக 1923 இலும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் ஒன்று செய்யப்படவாயிற்று. இப்பணி தொடர்பில் இளங் குரிசில் கன்னங்கரா அவர்கள் ஆற்றிய சேவை பற்றி அக்காலத்து ஆங்கிலப் பத்திரிகைகள் அவரை வானளாவப் புகழ்ந்திருந்தன.

தீவிர தேசீய காங்கிரஸ் வாதியான கன்னங்கரா அவர்கள் தேசீய காங்கிரசுக் கூட்டமர்வுகள் யாவற்றிலும் மிகுந்த உற்சாகத்தோடு பங்குபற்றி முக்கிய உறுப்பினர் ஒருவராகப் பணிபுரிந்து வந்தார். காங்கிரசின் முக்கிய பிரேரணைகள் எல்லாவற்றையும் சமர்ப்பிக்கும் பொறுப்பு அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1920 இல் தற்காலிகமான அரசியலமைப்புச் சீர்த்திருத்தமொன்றை ஏற்றுக் கொள்வதாக தேசீய காங்கிரசுத் தலைவர்கள் கூறியபோது அஞ்சா நெஞ்சத்துடன் அதனைப்பலமாக எதிர்த்துப் பேசியவரும் அவரே.

## திருமணம்

தேசியத் தொண்டிலும் அரசியல் தொண்டிலும் மும்முரமாக ஈடுபாடு கொண்டிருந்த இளம் பருவத்து கன்னங்கராவின் வாழ்க்கைத் துணைவியாகப் பருவ மங்கையொருத்தியை மணம் புரிந்து கொள்ளும் மங்கல நாள் 1922இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயமானது. அம் மங்கை கண்டி மாநகரத்து வாசலே முதலியார் பதவியை வகித்த ஜே. சீ வீரசூரியா அவர்களின் புதல்வியொருத்தியும் புகழ் பெற்ற சட்டவறிஞரான என். ஈ. வீரசூரியாவின் சகோதரியுமான செல்வி எடித் வீரசூரியா ஆவார். இத் திருமண உறவு காரணமாக அத் திருமணம் நடந்து ஈராண்டுகளுக்குள். 1923 இல் திரு. ஓ. சீ. திலகரத்தினுவின் திடீர் மரணத்தையடுத்து காலியான சட்ட நிரூபண சபையின் காலி ஆசனத்துக்குத் தெரிவு செய்யப்பெறும் நல் வாய்ப்பும் திரு. கன்னங்கராவுக்குக் கிட்டியது.

## காலி ஆசனம்

திரு. கன்னங்கரா 1923 யூன் மாதம் 18 ஆந் திகதி இடம்பெற்ற அத் தேர்தலின் போது ஏறத்தாழ 2000 சதுர மைல் வரை அகன்று பரந்த பிரதேசமான தென் மாகாணத் தேர்தல் தொகுதிக்குரிய 2,084 மொத்த வாக்குகளில் 1969 வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றியினைத்தமதாக்கிக் கொண்டார்.

இந்த வெற்றியானது நமது செம்மலின் வாழ்க்கையினைப் புதிய தோர் பாதையில் இட்டுச் செல்லத் துணைபுரிந்தது. அவ் வெற்றி தனிநபர் பெற்ற வெற்றியாகக் கொள்ளலாகாது. அது இலங்கையின் என்றுமே கண்டிராத அரசியல் முன்னேற்றத்தினையும் கல்வி மறுமலர்ச்சியினையும் ஏற்படுத்தியதும் வியத்தகு ஒரு புரட்சிக்கு வழி வகுத்ததும் நாட்டு மக்கள் அனைவரையும் கண் விழிக்கச் செய்ததுமான மாபெரும் வெற்றியாகும்.

## சட்ட நிரூபண சபை உறுப்பினர்

சட்ட நிரூபண சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட நாள் தொட்டு கன்னங்கரா அவர்கள் நாட்டுக்கு மகத்தான பணியை ஆற்றி வந்தார். தருக்கத்தின் விற்பன்னரான அவர் அச் சபையில் நடந்த சூடு கொண்ட விவாதங்களின்போது மாற்றாரின் ஆதாரமற்ற கருத்துக்களைச் சிதறடிக்கும் நாவன்மை கொண்டிருந்தார். நீதியினையும் சத்தியத்தினையும் பேணிவந்தார். தவறணைகள் இல்லாத பிரதேசங்களில் கள் இறக்குவதற்கு மரங்களை ஒதுக்குதற்கு அனுமதி வழங்கும். சட்டமூலத்தை 1923 இல் சமர்ப்பித்தபோது மது ஒழிப்பு வீரரான கன்னங்கரா அவர்கள் அதனைப் பலமாகக் கண்டித்துப் பேசினுர்.

## சுயமொழி ஆசிரியர்களின் உரிமைகள்

அன்று சுயமொழி ஆசிரியர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையில் ஆசிரியர்த்தொழில் புரிந்து வந்தார்கள். மிகவும் குறைந்த சம்பளத்தைப் பெற்று வந்த அவர்களுக்கு இளைப்பாற்று ஊதியத்திட்டமெதுவும் இருக்கவில்லை. சுயமொழி ஆசிரியர்களின் இத்துயர்மிகு நிலையினை அரசினர்க்குச் சுட்டிக் காட்டிய கன்னங்கரா அவர்கள் ஆசிரியர்களுக்கு ஏற்றம் மிக்க புதிய வேதன அளவுத்திட்ட மொன்றையும் ஓய்வூதியத்திட்ட மொன்றையும் உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு சட்ட நிரூபண சபையோரைக் கேட்டுக் கொண்டார். இவ் விவாதங்களின் போது கன்னங்கரா அவர்கள் காட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவன்மையின் விளைவாக ஆசிரியர்களின் நிலையினையும் வேதன அளவுத் திட்டங்களையும் ஆராய்ந்து அறிக்கையிடும் பொருட்டு 1926 ஆம் ஆண்டில் கல்வி ஆணைக்குழுவொன்று அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டது. நமது அருமைத் தலைவரும் அக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1931 இல் தொனமூர் ஆட்சிமுறை புகுத்தப்படும் வரை கன்னங்கரா அவர்கள் சட்ட நிருபண சபையின் காலி ஆசனத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் அவருடைய செயலார்வம் மிக்க நடவடிக்கைகளின் காரணமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் பலவாகும். தவறணைகள் அடைப்புக் கட்டளைச் சட்டம், ஒழுக்கக்கேடுகள் குற்றவியல் கட்டளைச்சட்டம், பௌத்த சமய விடுமுறைநாள் ஏற்பாட்டுக் கட்டளைச் சட்டம், வருமானவரிக் கட்டளைச் சட்டம் முதலியன அவற்றுள் முக்கியமானவைகளாகும். அரச ஊழியர்கள் சிலருக்கும் சாதிகள் சிலவற்றுக்கும் பாகுபாடு காட்டும் முறையில் அரசாங்கம் நடந்து கொண்ட விடயங்களைச் சுட்டிக்காட்டிய கன்னங்கரா அவர்கள் அத்தகைய பாகுபாடுகளை ஒழிக்கும் கட்டளைச் சட்டமொன்றையும் நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்தார்.

1930 இல் இலங்கை தேசீய காங்கிரசின் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்ற கிறிஸ்டோபர் கன்னங்கரா அவர்கள் 1931 ஏப்பிறல் மாதத்தில் தொனமூர் அரசியலமைப்பின் கீழ் அரசப் பேரவை நிறுவப்பட்டதையடுத்து நடாத்தப்பட்ட முதலாவது ''சருவசன வாக்குரிமை'' த் தேர்தலின் போது தம்மை எதிர்த்த வேட்பாளர் பெற்ற வாக்குகளின் இருமடங்கு வாக்குகளைப் பெற்று காலி தேர்தல் தொகுதியின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவ்வாண்டிலேயே கல்வி நிறைவெற்றுக் குழுவின் தலைவராகவும் இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராகவும் அரசப் பேரவை உறுப்பினர்களின் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார். தேசீயச் சீருடை அணிந்த முதலாவது அமைச்சரும் அவரே. 1954 இல் எலிசபெத் மகா ராணியின் வரவேற்பு விழாவின்போதும் தேசீய உடையினை அவர் கைவிடவில்லை. தமது வாணாள் எல்லாம் எளிய வாழ்வுக்கு எடுத்துக் காட்டாகவே அவர் விளங்கினார்.

இவ் வண்ணம் 1931 இல் கல்வி அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்ட நம் பெரியார் 1947 ஆம் ஆண்டு வரையான அரசப் பேரவையின் பதவிக் கால முழுவதிலும் இடையாறுது அப்பதவியை அணிசெய்தார். ஊக்கம் மிக்கச் சீடராகவும் அறிவுமிக்க ஆசிரியராகவும் தாம் பெற்ற அனுபவங்களையும் தமது நுண்மாண்நுழை புலமையினையும் பயன்படுத்தி கல்விப் பிரச்சினைகளைப் பகுத்தறியும் ஆற்றல் பொருந்தியவராய் தம் பதவியின் பாரதூரமான கடப்பாடுகளை கன்னங்கரா அவர்கள் எளிதாக நிறைவேற்றிவந்தார்கள். எனினும் உலக முழுவதினையும். ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திற்கு இந் நாடும் உட்பட்டிருந்தபடியால் பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளித்துக் கொள்ளவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது ஆனால் அவர் பின்வாங்க வில்லை. தெளிவான கண்ணோட்டத்துடனும் மனவுறுதியோடும் பணி புரிந்த புதிய கல்வி அமைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர் அன்று நிலவிய பாரிய கல்விப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்தார்.

## அரச உதவிபெறும் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை

ஆசிரியர்த் தொழில் புரியும் ஆயிரக்கணக்கானோர்களின் வாழ்க்கை நிலை உயர்த்துவது அன்னாரின் முதற் பணியாயிற்று. சேவையில் திருப்தியின்றி, பிச்சை எடுப்பவர்களைப் போன்று தன் மானத்தைப் பறிகொடுத்தவர்களாய் இருந்த ஆசிரியர்கள், குறிப்பாக தனியார் பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர்கள் எதிர் நோக்க வேண்டியிருந்த இன்னல்கள் அன்னாருடைய மனதை உறுத்தின. இடர்கள் பலவற்றுக்கிடையில் வாழ்ந்த வறிய ஆசிரியர்களின் சம்பளத்தைச் சூறையாடிய பாடசாலை முகாமையாளர் சிலரின் இரும்புப்பிடியிலிருந்து அவ்வாசிரியர்களை விடுவிப்பது தான் அன்னார் மேற் கொண்ட முதற் பணியாகும். மிக விரைவில் உதவிபெறும் பாடசாலைகள் கட்டளைச் சட்டத்திற்குத் திருத்தங்கள் பல புதிய அமைச்சரால் கொண்டுவரப்பட்டன. அதன் விளைவாக ஆசிரியர்கள் முகாமையாளரிடம் சாட்டாங்கமாகத் தண்டனித்துச் சம்பளப் பிச்சைகேட்ட காலம் மலையேறி விட்டது. தாம் ஆற்றிய சேவைக்குரிய சம்பளத்தைத் தன்மான முள்ளவர்களாய் பாடசாலை அதிபரின் மூலமாக அல்லது அஞ்சல் அலுவலகம் மூலமாகப் பெற்றுக் கொள்ளும் புதியதோர் காலம் உதயமாயிற்று.

இவ்வாறு ஆசிரியர்களுக்குக் கிடைத்த சுதந்திரம் சம்பளத்துக்கு மட்டும் உத்தரவாதமளிப்பதாய் அமையவில்லை. ஆசிரியர்கள் பாடசாலை முகாமையாளர்களது பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு ஆசிரியர்த் தொழிலின் சுதந்திரத்திற்காகவும் மேம்பாட்டுக்காகவும் இன்றியமையாத புதிய அமைப்பாண்மைகளை முதன் முதல் உருவாக்கிக் கொள்வதற்கும் அது உத்தரவாதமளித்தது.

## பாடவிதானச் சீர்த்திருத்தம்

மிகப் பழைய கற்பித்தல் முறைகளைத் தழுவிக் கொண்டிருந்த அக்காலத்துக் கல்வி முறையின் பாடவிதானத்தை மாற்றுமல் விடுதலை வேட்கை கொண்ட இனத்தை உருவாக்க முடியாதென்பதை புதிய அமைச்சர் உணர்ந்து கொண்டார். எனவே நூல் அறிவுக்கு மட்டுமே முதன்மை வழங்கப்பட்டிருந்த பழைய கல்விப்பாடவிதானத்தை மாற்றிவித்து மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சியளிக்கப்படும் பாடசாலை பாடவிதானமொன்றை அமுலுக்குக் கொண்டுவந்தார். ''கிராமியக்கல்வி'' எனக் குறிக்கப்பட்ட இப்புதிய நிகழ்ச்சித் திட்டத்தைச் சரிவர அமுல்படுத்துவதற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரையும் நியமனஞ் செய்தார்.

மாணவர்களை உளவளர்ச்சியுடன் உடல் வளர்ச்சியும் கொண்டவர்களாகத் திகழச் செய்வதற்கே கிராமியக் கல்வியால் திட்டமிடப்பட்டிருந்தது. மாணவர்களது அழகியல் அறிவினைப்பெருக்கும் அதே நேரத்தில் செய்

தொழில் அறிவினையும் வளர்ப்பது அதன் நோக்கமாக இருந்தது. இப் புதிய வேலைத்திட்டத்தின் விளைவாக உணவுப்பயிரிடல் இயக்கம் தோன்றிய தெனலாம். இத்திட்டம் காரணமாக உடற் பயிற்சிகளுக்காகவும் விளையாட்டுக் களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த ஆயிரக் கணக்கான பாடசாலைக் காணிகள் மரக்கறித் தோட்டங்களாகவும் பழமரத் தோட்டங்களாகவும் காட்சியளித்தன. இத் திட்டம் சிறிது காலம் இடை நிறுத்தப்பட்டிருந்த தெனினும் 1965 ஆம் ஆண்டுச் சீர்த்திருத்தத்துடன் மீண்டும் நடைமுறைக்கு வரலாயிற்று.

## உணவு உற்பத்தி இயக்கம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது யப்பான் நாடும் போரில் இறங்கி உணவு இறக்குமதிக்குத் தடைகள் ஏற்பட்டமையால் உணவு உற்பத்தி இயக்கத்தின் முக்கியத்துவம் பற்றிய பலர் அறியத்தொடங்ஞர்கள் பயிரிடல் இயக்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட கல்வி அமைச்சர் அதனை தனிப்பட்ட முறையில் கண்காணித்து வந்தார். இதன் விளைவாக பாடசாலைகளின் பழமரத் தோட்டங்களும் மரக்கறித் தோட்டங்களும் பச்சைப்பசேல் என்று காட்சியளித்தன. இலங்கையின் உணவு உற்பத்தி இயக்கத்தை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கென குடியேற்ற நாட்டுச் செயலாளரின் பணிப்பின் கீழ் 1944 இல் இலங்கைக்கு விஜயம் செய்த கலாநிதி டபிள்யு. எம். கிளேட் அவர்கள் பாடசாலைகளிலுள்ள பயிர்த் தோட்டங்களைப் பற்றி பின்வருமாறு வியந்துக் கூறியுள்ளார்.

''இலங்கையில் பாடசாலை மாணவர்களால் அழகுறப் பயிரிடப்பட்டிருந்த பாடசாலைத் தோட்டங்களினதும் வீட்டுத் தோட்டங்களினதும் கண்கொள்ளாக் காட்சியைக் கடந்த சில ஆண்டுகளில் எனது ஆய்வுக்குட்பட்ட எந்த நாட்டிலுமே நான் கண்டதில்லை. நான்கண்டவை, கேட்டவை ஆகிய யாவற்றையும் உளமாரப் போற்ற வேண்டியவன் ஆவேன்'' இலங்கையின் உணவு உற்பத்தி இயக்கத்தின் அமுலாக்கத்தினைக் கண்டுப் பலவாறு புகழ்ந்த கலாநிதி கிளேட் அவர்கள் இலங்கையின் உணவு உற்பத்தி இயக்கத்தின் திட்ட வரைவுகளை ஏனைய குடியேற்ற நாடுகள் சிலவற்றின் ஆளுநர்களுக்கும் எழுதி அனுப்பி அவ்வண்ணம் நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்திஞர்.

## பாடசாலை மாணவர்கட்குப் பகலுணவு

பாடசாலை மாணவர்கட்குப் பகலுணவு வழங்கலானது இன்றுவரை அமுலாக்கத்திலுள்ள மிக முக்கியமான நலனேம்புகை நடவடிக்கை எனலாம். இது 1935 ஆண்டு வாக்கில் நாடு பூராவும் பரவிய மலேரியாச் காச்சலின் விளைவாக அகதிகளாக்கப்பட்ட பாடசாலை மணவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு முதன்முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படலாயிற்று, முதலில் நாட்டின் சில மாவட்டங்களில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட இத் திட்டம் மக்களால் விரும்பி ஏற்கப்பட்டதனுல் பின்னர் நாடெங்கிலும் அமுலாக்கப்பட்டது. இந் நடவடிக்கையால் பல இன்னல்களுக்கு மத்தியில் பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்களின் உடல் நலம் மேம்பாடுற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி பிள்ளைகளின் படிப்பும் பாடசாலைகளின் வரவுப் புள்ளிவிவரங்களும் அதிகரித்தன.

## கல்விச் சிறப்புக் குழு

அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்டிருந்த கல்விச் சிறப்புக் குழுவினருக்கு ஊக்கமளிப்பதன் மூலம் முக்கியமான மாற்றங்கள் சிலவற்றைச் செய்து முடிப்பதில் கன்னங்கரா அவர்கள் அயராதுழைத்து வந்தார். இச் சிறப்புக் குழுவால் விதந்துரைக்கப்பட்ட சிபாரிசுகளுள் நாடளாவிய வகையில் கல்வித்துறையில் பெரியதோர் மாற்றத்தை ஏற்படுத்திய தீர்மான மொன்று 1943 இல் எடுக்கப்படலாயிற்று, அதுதான் இலவசக் கல்வித் திட்டம். சிறப்புக் குழுவின் சிபாரிசுகளுக்கு அரசப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெற்றெடுப்பதற்குத் தமது எதிராளிகளின் கடுமையான எதிர்ப்புக்களை முறியடித்தும் அவர்களது வாதப் பிரதிவாதங்களுக்குத் தக்கபதில் இறுத்தும் நமது அமைச்சர் போராடினுர். ஆனுல் சூருவளிப் போர் பின்னரே மூண்டது.

## இலவசக் கல்விக் கட்டளைச் சட்டம்

பாலர் வகுப்பு முதல் சருவகலாசாலைப்பட்டத் தேர்வு வரை முற்ற முழுதான கல்வித்துறையெல்லாம் அளாவியவாறு இலவசக் கல்வி வழங்குவதற்கென அன்னுர் அறிமுகப்படுத்திய செயல் திட்டமானது கலாநிதி கிறிஸ்டோபர் விலியம் விஜேகோன் கன்னங்கரா என்னும் திருநாமத்தை இலங்கையின் இன்றையத் தலைமுறையினரும் வருங்காலச் சந்ததியினரும் பக்தி சிரத்தையுடன் ஏற்றுப்போற்றும் வரலாற்றுப் பெருமை மிக்க நடவடிக்கையாகும். இலவசக் கல்விச் சட்டம் அன்னுரின் தனி முயற்சியாலே நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டமையாலன்றோ இலவசக் கல்வியின் தந்தை என்னும் சிறப்புப் பெயர் அன்னுருக்கு வழங்கப்பட்டது.

இச்சட்ட அமுலுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடவடிக்கைகளின் மூலமாகவோ மாற்றங்களின் மூலமாகவோ இந்நாட்டுக் கல்வியின் பயனைப் பெற்றவர்கள் மிகச்சிலரே இருந்தனர். அப்பயனும் நகரங்களில் வசித்தவர்களாலும் கிராமப் புறங்களில் பணம் படைத்தவர்களாலும் மட்டுமே எய்தப் பெறமுடிந்தது.

இன்ப வசதிகள் அனைத்தும் கொண்டிருந்த தலை நகரத்துப் பெரிய கல்லூரிகளில் மட்டுமன்றி கிராமப் பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த 'உயர் கல்வி நிலையங்களெ'ன அன்று கூறப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகளிலும் சேர்ந்து படிக்கும் வாய்ப்புச் சிலருக்கு மட்டுமேகிட்டியது. மருத்துவர்கள், பொறியிலாளர்கள். கலைமானிகள், விஞ்ஞானிகள் ஆகியோரை உருவாக்கிய பல்கலைக்கழகப்படிப்பானது இம்மையில் பெறப்படமுடியாததும் அறவினைச் செய்து மறுமையில் வாய்த்துக்கொள்ள வேண்டியதுமான எட்டாக்கனியாகவே கருதப்பட்ட காலம் அது. ஆகவே மக்கள் பலர் அத்தகைய படிப்புப் பற்றிய வேட்கையில்லாதிருந்தனர். இச் சூழலில் ஆங்கிலம் படித்தவர்கள்—அதனுலேயே சிறப்புரிமைகொண்ட உயர் வகுப்பினர், சிங்களம் படித்தவர்கள்—அதனுலேயே கீழ் வகுப்பினர் எனக்கூறப்பட்ட இரண்டு வகுப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியிருந்தன. பொருள் படைத்தவர்கட்கும் பொருளில்லாதோர்களுக்குமிடையில் பெரும் இடைவெளி ஏற்பட்ட பிற்போக்கான சமுதாயமே அன்று நம் நாட்டில் நிலவியது.

மிகுந்த திறமைசாலிகளாகப் பிறந்தார்களெனினும் வறிய குடும்பங்களில் பிறந்த ஒரேயொரு தவறு காரணமாகப் பாலை வனத்திலும் அடர்ந்த காடுகளிலும் மலர்ந்து வாடிப்போன தேசீயப் புஷ்பங்களின் எண்ணிக்கை ஏராளம். இம் மலர்களின் பல் நிறங்களைக் கண்டுகளிக்கவோ நறுமணங்களை மோந்துக்களிக்கவோ நம் நாட்டு மக்கள் கொடுத்துவைக்கவில்லை. செல்வ மிகுதியைக் கொண்ட—ஆனல் பெரும்பாலும் படிப்பில் திறமையற்ற—சிலருக்கு மாத்திரம் கல்வி வசதிகளை வழங்கிய கல்விமுறைதான் இத்துர்பாக்கிய நிலைக்குக் காரணமென்பதை நமது அமைச்சர் புரிந்து கொண்டார்கள்.

அதிகம் பேசத்தேவையில்லை. தென் மாகாணத்தில் திறமை மிக்க மாணவன் என்ற வகையில் புலமைப்பரிசிலைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருப்பின் அமைச்சர் பதவியை அல்ல அரசாங்க அலுவலகத்தின் சாதாரண குமாஸ்தா வேலையினையாவது பெற்றிருக்க முடியாது என அவருக்குப் புலனாகியது. பரிசில் பெற்ற மாணவனல் அக் கல்லூரியில் சேர்ந்த பின்னரும் மாணவ விடுதியின் மூன்றும்தர விடுதியாளராகவே படிப்பினை மேற்கொள்ளும் கேவலமான நிலை தமக்கு எற்பட்டதெனவும் அவர் விசனப்பட்டார். ஆதலால் பரிகாரம் செய்வதற்கு மேலும் தாமதித்தலாகாதென அவர் எண்ணினர்.

இலவசக் கல்விச் சட்டம் அரசப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. எதிராளிகளின் முகாம்கள் யாவும் ஒரே குரலில் அவரையும் அவர் சமர்ப்பித்த சட்டத்தையும் தாக்கினர்கள்.

ஆயினும் அவர் சற்றேனும் சலிக்க வில்லை. சற்றேனும் விட்டுக் கொடுக்கவும் இல்லை. தாம் சமர்ப்பித்திருந்த சட்டம் சிறப்புரிமை மிக்கவர் சிலரைப் பாதிப்பதெனினும் சமூகத்தில் உரிமைகள் எவையேனுமில்லாத இலட்சக் கணக்கான இன்றையச் சிறுர்களினதும் வருங்காலச் சிறுர்களினதும் தேர்ச்சிகளையும் புலமைகளையும் மேலோங்கச் செய்து அவர்களைச் சமுதாயத்தின் உயர்பீடத்தில் கொலுவீற்றிருக்கச் செய்யும் என்பதில் அவருக்குப் பெருநம்பிக்கையிருந்தது. எனவே தமக்கேயுரிய மனத்திண்மையுடன் எதிராளிக் கூட்டங்கள் எல்லாவற்றையும் தோற்கடித்தார்கள். விகடச் சித்திரங்களின் வாயிலாகவும் நையாண்டிப்பேச்சுகளின் வாயிலாகவும் தமது சொந்த வாழ்வினையும் மாசுபடுத்துவதற்கு தம் மீது எறியப்பட்ட வசைமொழிகளை இசை மொழிகளாகவே எண்ணிச் செயல்புரிந்த மகான் அவர். அதன் விளைவாக நாடு அனைத்தும் வீறு பெற்றெழத் துணைபுரிந்த அதி சக்தி வாய்ந்த இலவசக் கல்வி முறை உதயமானது. அதனல் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மையினை அவரே பின் வருமாறு விளக்கியுள்ளார்.

''செங்கற்குவியலாகவிருந்த உரோம நகரத்தை நான் பளிங்குக் குவியலாக மாற்றினேன்.'' என்று ஒகஸ்டர் மாமன்னர் ஒருநாள் தமது சாதனைகளை எடுத்தியம்பும்போது தன்னையே புகழ்ந்து கொண்டார். சான்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பொறுத்தருளல் வேண்டும். இத்தருணத்தில் இலங்கையின் கல்வி முறை பற்றிய இம் மகஜரை முடித்துக் கொண்டுபின்வருமாறு என்னைப் புகழ்ந்து கொள்வதற்கு இடமளியுங்கள். அதிக விலையில் வழங்கப்பட்ட கல்வி இலங்கையின் அரசப் பேரவையால் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்துள்ளது. மூடிய புத்தகமாக விருந்த அது திறந்த ஆவணமாக மாற்றப் பட்டுள்ளது. செல்வந்தர்களின் தனியுரிமையாக விளங்கிய அது வறிய மக்களின் மீறமுடியாத உரிமையாக்கப்பட்டுள்ளது.''

## முதலாவது இலவசப் பல்கலைக்கழகத்தை நிறுவுதல்

இலவசக் கல்விச் சட்டம் அமுலுக்கு வர மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இலவசமாகப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்ட போது அச்சட்டம் நாட்டுக்குப் பயக்கும் பெரு நன்மைகளை மக்கள் அறியத் தொடங்கினர்கள், அன்று தொட்டு சிறப்புரிமை மிக்க உயர் வகுப்பினரின் மாணவர்கள் சிலருக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த இலங்கைப் பல்கழகத்தின் கதவுகள் நகரங்களுடன் எதுவிதத் தொடர்பும் இல்லாத கிராமப்புறங்களிலிருந்து வந்த செல்வச் சிறப்புமில்லாத ஆனல் அறிவுப்புலமை மிக்க மாணக்கர்களுக்கும் திறக்கப்பட்டன. இலவசக் கல்வியின் தந்தையின் புகழ் நீடூழி வாழ்க வெனப்போற்ற வேண்டும்.

வளர்ச்சி குன்றிய கிராமப் புறங்களிலுள்ள சாதாரணக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பலர் பல்கலைக்கழகங்களிற் சேர்ந்து கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், ஆகிய பாடங்களில் பட்டம் பெற்றவர்களாய் இன்று சமூகத்தை அணி செய்து வருகிருர்கள். ஆனல் அத்தகு பிரதேசத்திலிருந்து அன்று மருத்துவர் ஒருவரோ, பொறியியல் வல்லுநரோ அரச நிருவாக உத்தியோகத்தர் ஒருவரோ சட்டத்தரணியோ தோன்றுவது அரிதாய் இருந்தது. அங்ஙனம் தோன்றுவது வியத்தகு செயலாகவே பலர் எண்ணி வந்தனரென்பதை அக்காலத்துச் சூழலை அறிந்தவர்கள்யாவரும் ஒப்புக் கொள்வர்.

## கௌரவக் கலாநிதிப்பட்டம்

தமது நாட்டின் கல்வித்துறைக்காற்றிய ஈடிணையற்ற தொண்டினைப் போற்றுவதற்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தால் 1943 இல் நடாத்தப் பட்ட முதலாவது பட்டமளிப்பு விழாவின் போது அதன் துணைவேந்தரான கிறிஸ்டோபர் கன்னங்கரா அவர்களுக்கு கௌரவக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

## மத்திய மகாவித்தியாலயங்களை நிறுவுதல்

இலவசக் கல்வியின் பெருநன்மைகளை நாடெங்கிலும் உள்ளோர் பெற்றுப் பயனடையும் வாய்ப்பு மத்திய மகா வித்தியாலங்கள் எனப்படும் கல்வி நிலையங்களை நிறுவியதன் பின்னரே ஏற்பட்டது. நாட்டில் தேர்தற் தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒன்று என்ற விகிதாசாரத்தில் நிறுவப்பட்ட இக் கல்வி நிலையங்கள் அவ்வப்பகுதிகளில் சிறு பல்கலைக்கழகங்களாகத் தோற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளித்தன. இதன் காரணமாக மத்திய வித்தியாலயங்களைச் சுற்றி ஐந்து அல்லது ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்தமாணுக்கர்களுக்கும் பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு வரை படிக்கும் வசதி ஏற்பட்டது.

இன்று மத்திய மகா வித்தியாலயங்கள் எத்துணை சிறப்புடன் வளர்ச்சியடைந்துள்ளன வென்பதை யாவரும் அறிவர். நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக சிறந்து விளங்கும் தலைநகரத்து உயர் கல்லூரிகளையும் பின்வாங்கச் செய்யும் அளவுக்கு மத்திய மகா வித்தியாலயங்கள் வளர்ந்துள்ளன வென்பது உயர் நிலைத்தேர்வுகள், போட்டித் தேர்வுகள் ஆகியவற்றின் பெறுபேறுகளை உற்று நோக்குபவர்கட்குத்தெரியும். இன்று அரசாங்க நிருவாகச் சேவையின் உயர்பதவிகள் பலவற்றை மத்திய வித்தியாலயங்களைச் சேர்ந்த பழைய மாணுக்கர்கள் வகித்து வருகின்றூர்கள். இவர்கள் கிறிஸ்டோபர் கன்னங்கராவின் புகழினை மேலும் ஓங்குவிப்பார்களாகத் திகழ்வர்.

## புதிய புலமைப் பரிசில் முறையொன்றை அறிமுகப்படுத்தல்

இலவசமாகக் கல்வி கற்கும் வசதியினை மாத்திரம் கொண்டு நகரங்களில் அல்லது பல்கலைக் கழகங்களில் படிப்பதற்கு இயலும் மாணவர்கள் சிலரே இருக்கிறூர்கள். அதன் விளைவாக அதி திறமை வாய்ந்த மாணவர்கள் பலர் உயர்கல்வியினைப் பெற வியலாதவர்களாய் இருக்கிறூர்கள். எனவே அதி திறமை வாய்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை தடையேதுமின்றிப் படிப்பதற்கு வசதி செய்யும் நோக்கில் விரிவான அடிப்படையில் இயங்கும் புலமைப்பரிசில் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு கிராமப் பாடசாலையிலிருந்து மத்திய மகா வித்தியாலயத்திற்கும் அங்கிருந்து பல்கலைக்கழகத்திற்கும் சாதி, இன, மதப் பாகுபாடுகள் அற்ற நிலையில் நாட்டில் பிறந்த திறமைமிக்க மாணுக்கர்கள் யாவரும் செல்லக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டது.

## கல்விகற்கும் மொழி தாய்மொழியாதல்

இலவசமாக் கல்வி புகட்டப்படினும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பெறினும், அந்நிய நாட்டு மொழி மூலம் கல்வி புகட்டப்படுமாயின் ஒரு சீரான முன்னேற்றமோ சமத்துவமோ ஏற்படா வென்பதை உணர்ந்த கன்னங்கரா அவர்கள் பாடசாலைகளின் சுய மொழி மூலம் கல்வி புகட்டுவதற்கு அடிப்படையான ஏற்பாடுகளை மேற்கொண்டார். அவர் சட்ட நிரூபண சபையின் அங்கத்தவராக இருந்த காலம் தொட்டு சிறூர்களின் கல்வியானது தாய்மொழியில் புகட்டப்படல் வேண்டுமென்னும் திடமான அப்பிராயத்தைக் கொண்டிருந்தார்.

இது பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் 1929 இன் கல்வி ஆணைக்குழு அறிக்கையில் தரப்பட்டுள்ளன. 1932 ஆம் ஆண்டில் ரோயல் கல்லூரியின் பாலர்பிரிவில் சிங்கள மொழியில் மாத்திரம் கல்வி புகட்டும் வகுப்பொன்றை ஆரம்பித்து அவர் இதற்கு ஆதரவு அளித்தார். இவ்வாறு வகுப்புவாரியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் ஆண்டு வாரியாகவும் சுயமொழிக் கல்விக் கொள்கையினை நடைமுறைப் படுத்துவது அவருடைய நோக்கமாக விருந்தது. 1945 ஒக்டோபர் 1 ஆந் திகதி முதல் இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் தாய்மொழி மூலம் கல்வி புகட்டப்படல் வேண்டுமெனக் கட்டளை பிறப்பிப்பதன் வாயிலாக சுய மொழிக் கல்விபுகட்டல் திட்டத்தை அவர் அறிமுகப்படுத்தினர்.

கல்விச் சிறப்புக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த யோசனைகள் எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்தும் வசதி கன்னங்கரா அவர்களுக்கு வாய்க்கவில்லை. அவருக்கு அந்த வாய்ப்பு கிட்டியிருப்பின் இன்று நாம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் பலவற்றை இற்றைக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கக்கூடிய நிலையிருந்தது.

1947 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது கன்னங்கரா அவர்கள் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தெரிவாகவில்லையெனினும் நாட்டுக்குச் சேவை செய்வதிலேயே ஆர்வம் மிக்கவராய்த் திகழ்ந்தார்கள்.

## இந்துனீசியாவில் இலங்கை தூதுவர் பதவி

1950 இல் அவர்கள் இந்துனீசியாவில் முதலாவது இலங்கை தூதுவராக நியமனம் பெற்றார்கள். ஆயினும் இரண்டு ஆண்டுகளின் பின்னர் இலங்கை திரும்பிய அவர் 1952 இல் இடம் பெற்ற பொதுத் தேர்தலின்போது அகலவத்தை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு அதிபெரும்பான்மை யான வாக்குகளினால் வெற்றிப் பெற்றார்கள்.

## உள்ளூராட்சி அமைச்சர் பதவி

1952 யூன் மாதம் 1 ஆந் திகதி பிரதம அமைச்சர் டட்லி சேனநாயக்கா அவர்கள் நிறுவிய அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சர் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார். சட்ட வறிஞராகப் பணிபுரிந்த காலம் தொட்டு உள்ளூராட்சி அலுவல்களில் தொடர்பு கொண்டிருந்த நமது தலைவருக்கு புதிய பதவியில் பணிகளை எளிதில் நிறைவேற்றும் வல்லமை இருந்தது. 1952 ஆம் ஆண்டிறுதியில் உள்ளூராட்சி ஆணையாளரால் வெளியிடப்பட்ட நிரு வாக அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

''இலங்கையின் உள்ளூராட்சி நிருவாக வரலாற்றில் வேறெந்தக் காலத்தி லாவது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இவ்வளவு பண உதவிகள் வரையாது வழங்கப்படவில்லை.''

அங்ஙனமாயினும் தீவிர ஒழுக்காற்றுவாதியாக விளங்கிய கன்னங்கரா அவர்களின் கீழ் திறமையற்ற நிருவாகத்துக்கு இடமே இருக்கவில்லை. எனவே நிருவாகத்திறமையற்ற, ஊழல் மலிந்த உள்ளூராட்சி மன்றங்கள் பல வற்றைக் கலைத்துவிடுவதற்கு அவர் தயங்கவில்லை.

1953 ஒக்டோபர் மாதத்தில் பிரதம அமைச்சர் டட்லி சேனநாயக்கா ராஜினாமா செய்ததையடுத்து பதவியை ஏற்றுக் கொண்ட சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களின் புதிய அமைச்சர் அவையிலும் நமது பெரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங்கரா அவர்களுக்கே உள்ளூர் ஆட்சி அமைச்சர் பதவி வழங்கப் பட்டது.

இலங்கையின் உள்ளூராட்சி முறையினை ஆய்ந்து அறிக்கையிடுவதற்கு அரசச்சட்டவுரைஞர் என். கெ. சொக்சி அவர்களின் தலைமையில் ஆணைக் குழுவொன்றை நியமித்து உள்ளூராட்சி சேவைக்குப் பெரும் தொண்டாற் றியவரும் இவரே.

*1954* ஆம் ஆண்டில் பர்மாவில் நடாத்தப்பட்ட முப்பிடக நூல்களை ஒதித்திருத்தம் செய்யப்பட்ட ஆறும் சங்காயனவில் கலந்து கொள்வதற்கு இலங்கையிலிருந்து சென்ற தூதுக் குழுவிலும் கன்னங்கரா அவர்கள் அங்கம் வகித்தார்கள்.

*1956* ஆம் ஆண்டில் இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் கன்னங்கரா அவர்கள் அரசியல் மேடையிலிருந்து விடைபெற்றுக் கொண்டார். எனினும் அவர்கள் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாய் வரை தேசிய, சமூக, சமய விவகாரங்களில் நாட்டம் கொண்டவராகவே திகழ்ந்தார்.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அன்னார் ஆற்றிய அரிய சேவையினைப் போற்றுவதற்கு தேசிய அரசாங்கத்தால் *1965* நவம்பர் மாதம் *5* ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் மூலம் அன்னாருக்கு மாதாந்த ஓய்வூதிய மொன்று வழங்கப்பட்டது. *1969* செத்தெம்பர் மாதம் *23* ஆம் திகதி இலங்கை மக்கள் யாவரையும் பெரும் துயரத்தில் ஆழ்த்துவிட்டு கன்னங்கரா அவர்கள் விண்ணுலகம் எய்தினார்கள்.

கலாநிதி கன்னங்கரா அவர்களின் வாழ்க்கை வரலாறானது இலவசக் கல்வின் வரலாறாகும். இன்றைய சமூகப் புரட்சியின் ஆரம்பமும் அதுவே யாகும். இன்று ஏற்பட்டுள்ள அரசியல், சமூக, பொருளாதாரச் சீர்த்திருத் தங்களுக்கும் வருங்காலத்தில் ஏற்படும் அத்தகு சீர்த்திருத்தங்களும் கடை கால் இட்டவரின் வரலாறும் அதுவேயாகும்.

அன்னார் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆற்றிய தொண்டு பல்லாண்டு கள் மங்காது ஒளி வீசுமென்பது திண்ணம்.

தேசியக் தொடர் சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அவர்களின் புகழ் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org